செய்தி வெளியீடு எண்: 580 நாள்: 17.07.2008

அவசர கால ஊர்தி சேவைத் திட்டம் பற்றிய பத்திரிக்கை குறிப்பு – 17.07.2008

## தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டதின் கீழ், அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி சேவைக்கான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழக மக்கள் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கள ஆய்வு செய்தார்கள்

நோயாளிகளுக்கு தேவைப்படும் அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி சேவையை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு அரசு ஆணை வழங்கப்பட்டது. அந்த அரசு ஆணையில் குறிப்பிட்டபடி, இந்த சேவையில் அனுபவம் பெற்ற இ.எம்.ஆர்.ஐ (EMRI) என்ற நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நிறுவனம் நாட்டின் பல மாநிலங்களில் இத்திட்டத்தை நடத்தி அனுபவம் பெற்ற ஒன்றாகும். 06.05.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கும், இ.எம்.ஆர்.ஐ (EMRI) நிறுவனத்திற்கும் இடையே இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

முதல் கட்டமாக தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக 198 அவசரகால ஊர்திகள் வாங்கி, குளிர்சாதன வசதி மற்றும் அவசரகால பராமரிப்பிற்கு தேவையான உபகரணங்கள் பொருத்த இ.எம்.ஆர்.ஐ (EMRI) நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் தற்பொழுது அந்த ஊர்திகளை சீரமைத்து குளிர்சாதன வசதிகள் மற்றும் உபகரணங்கள் பொருத்தும் பணியினை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் முதலில் சென்னையில் துவக்கப்பட்டு, படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். ஒவ்வொரு ஊர்தியிலும் அவசரகாலத்தில் அளிக்கப்பட வேண்டிய சிகிச்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பணியாளரும், ஒரு ஓட்டுநரும் பணியமர்த்தப்படுவார்கள். இவர்களுக்கான தேர்வு முடிந்து முதல்கட்ட பயிற்சி தற்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இவர்கள் அவசர காலத்தில் நோயாளிகளை அழைத்து செல்லுகின்ற நேரத்தில், தேவையான அறிவுரைகளை, மத்திய செயல்பாட்டு நிலையத்திலுள்ள (Emergency Response Centre) அவசரகால சிறப்பு மருத்துவரின் வாயிலாக தொடர்ந்து பெறுவர். இந்த ஊர்தியை எந்த ஒரு மருத்துவம் சார்ந்த அவசரகால தேவைக்கும் அனைத்து மக்களும் பயன்படுத்துவதற்கு, எந்தவிதமான கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இது முற்றிலும் அரசால் வழங்கப்படும் ஒரு இலவசமான சேவையாகும்.

அவசர கால செயல்பாட்டு நிலையம் தற்காலிகமாக செயல்படும் வகையில் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள பயிற்சி நிலையம் தற்பொழுது கட்டட சீரமைப்புப் பணி ரூ.1.85 கோடி செலவில் நடைபெற்று வருகின்றது. இந்தப் பணியினை 17.07.2008 அன்று சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் பார்வையிட்டார்கள். அவ்வாய்வின் பொழுது இந்தத் திட்டம் தோராயமாக வருகின்ற ஆகஸ்ட் மாத இறுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்தார்கள். இவ்வாய்வின் பொழுது தமிழக சுகாதாரத் துறை செயலாளர் திரு.வி.கு.சுப்புராஜ், இ.ஆ.ப. அவர்களும், சிறப்பு செயலர் திரு.பி.டபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப. அவர்களும், இ.எம்.ஆர்.ஐ. மாநில ஒருங்கிணைப்பாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களும் மற்றும் அரசு அலுவலர்களும் ஆய்வின்பொழுது உடனிருந்தனர்.

இந்த ஊர்திகளை திறமையாக கண்காணிக்க நவீன தொழில்நுட்பம் கொண்டு, தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றத்தை பயன்படுத்தி இ.எம்.ஆர்.ஐ **(EMRI)** நிறுவனம் நிறுவகிக்கும். அதன் நடமாட்டம் மற்றும் நிலையிடம் கண்டறிந்து முழுமையாக வழி நடத்தும் பொருட்டு ஒவ்வொரு வண்டியிலும் புவிநிலை கண்டறியும் கருவி **(GPS)** பொருத்தப்படும்.

இந்த நிறுவனம் சென்னையில் தற்காலிகமாக ஒரு மத்திய அவசரகால செயல்பாட்டு நிலையம் **(Emergency Response Centre)** அமைத்து அதன் வாயிலாக இந்த அவசர கால சேவையை செயல்படுத்தும். இதில் மருத்துவம் தீ விபத்து மற்றும் காவல் துறை சம்பந்தமான அனைத்து அவசர நிலைகளிலும் மக்கள் கட்டணமில்லா தொலை பேசி எண்.**108** –ன் மூலம் இந்த மையத்தை தொடர்புகொள்ளலாம். தொடர்பு கொண்ட சில நொடிகளில் இத்திட்டதின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள அவசர கால ஊர்தி தேவையான இடத்தை நோக்கி புறப்பட்டு செல்லும். அரை மணி நேரத்திற்குள் தேவையான இடத்தை சென்றடைந்து நோயாளிக்கு தேவையான முதல் உதவி சிகிச்சையை அளித்து, வாகனத்தில் ஏற்றி, வழியில் தேவைப்படும் உயிர் காக்கும் சேவைகளை தொடர்ந்து செய்து, அவருக்கு தேவையான சிகிச்சை கிடைக்கும் மருத்துவமனையில் கொண்டு சேர்ப்பர். அந்த மருத்துவமனையில் தொடர்ந்து அவருக்கு மருத்துவம் அளிக்கப்பட்டு உயிர் காக்கப்படும் வாய்ப்பு அந்த நோயாளிக்கு கிட்டுகின்றது. இந்த சேவையினை செய்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு தற்பொழுது சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தப்பட உள்ளனர்.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், கண்காணிப்பாளர்கள் முதலியோரை இ.எம்.ஆர்.ஐ **(EMRI)** மூலம் தேர்வு செய்து தற்பொழுது பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் மத்திய செயல்பாட்டு நிலையத்தில் பொருத்தப்படும் தொழில் நுட்பக் கருவிகள் / மென்பொருள் முதலியவற்றை இந்நிறுவனம் வாங்கி தற்பொழுது பொருத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையம் இன்னும் இரண்டு வாரங்களில் செயல்பாட்டுக்கு தயாராகி விடும்.

மேலும், மாவட்ட அளவில் இயங்கும் வண்டிகளை கண்காணிக்க ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவார். அனைத்து மாவட்ட கண்காணிப்பாளர்களும் மாநில அளவில் ஒரு கண்காணிப்பாளரால் கண்காணிக்கப்படுவார்கள். மேலும் இவர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள மருத்துவமனைகளை பார்வையிட்டு அந்த மருத்துவமனைகளை இந்தத் திட்டத்தில் இணைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வார்கள்.

இதற்காக தேவைப்படும் கட்டடம், தொழில்நுட்ப கருவிகள், தளவாடச் சாமான்கள் முதலியவற்றிற்காக முதல் ஆண்டில் அரசால் **22.89** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ..**8.38** கோடி அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நிர்வாகச் செலவினம், ஊதியம், எரிபொருள் செலவு, மருத்துவச் செலவு, பராமரிப்புச் செலவு, காப்பீட்டுச் செலவு, பயிற்சி விளம்பரம் முதலிய செலவினங்களுக்காக அரசால் ரூ.**13.13**கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த செலவினத்தின் தனது பங்காக தேசிய ஊரக சுகாதார வளர்ச்சித் திட்டம் ரூ.**9.5** கோடிகள் வழங்கி உள்ளது.

**********

வெளியீடு: **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**